# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

SIXTH SEMESTER – **APRIL 2023**

## 16/17/18UTL6MC01 – SANGAM LITERATURE

Date: 29-04-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 AM - 12:00 NOON

**பகுதி – அ** *( 10 x 2 = 20 மதிப்பெண்கள் )*

***விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.***

1. “கடைக் கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகை கூட்டம் செய்தான்” – இடம் சுட்டி விளக்கம் தருக.
2. எட்டுத்தொகை நூல்களுள் அகம் சார்ந்த நூல்களை எழுதுக.
3. பொதும்பில் கிழார் நற்றிணையில் மந்தியின் செய்கையாகக் கூறுவது என்ன?
4. அம்மூவனாரின் தலைவி கூற்றாக நும் பாடப்பகுதியில் அமைந்த பாடலின் பொருள் என்ன?
5. வெள்ளிவீதியார் வெள்ளாங்குருகினை த் தூது விட்ட பாங்கினை குறிப்பிடுக.
6. தந்தையை இழந்த பாரி மகளிர் கையறு நிலையாகக் கூறிய செய்தி என்ன?
7. பிசிராந்தையார் தனக்கு நரையில ஆகுதலுக்குரிய காரணங்களாகக் கூறுவன யாவை?
8. தலைவி தான் சந்தித்த தலைவனை எவ்வாறு தோழிக்கு அடையாளம் காட்டுகிறாள்?
9. திருமாவளவன் வளம் பெருக்கிய தன்மைப்பற்றி எழுதுக.
10. காவிரி பூம்பட்டினத்து உணவு சாலை பற்றி குறிப்பு வரைக.

**பகுதி – ஆ** *( 5 x 7 = 35 மதிப்பெண்கள் )*

***எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.***

11. பட்டினப்பாலை கூறும் திருமாவளவன் பெருமைகளை குறிப்பிடுக.
12. குறுந்தொகையில் தலைவன் கூற்றாக அமைந்த பாடல்களின் பொருள் கூறி தலைவனின் நிலையை புலப்படுத்துக.
13. பட்டினப்பாலை கூறும் காவிரியின் பெருமையும் வளமையும் பற்றி எழுதுக
14. பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நீர்நிலைகளை பெருக்க வேண்டி குடபுலவியனார் கூறிய அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.
15. பெருவழுதி தோழி கூற்றாகக் குறிஞ்சித் திணைச் சார்ந்து கூறும் செய்திகளைக் குறிப்பிடுக
16. “எம்முளும் உளன் ஒரு பொருநன்” என ஔவையார் அதியமானைப் பற்றிக் கூறியதற்குக் காரணங்கள் யாவை?
17. பொருளது நிலையின்மை, தலைவி ஆற்றாமை கூறித் தலைவனைச் செலவழுங்குவித்ததனை விவரிக்க.

**பகுதி – இ** *( 3 x 15 = 45 மதிப்பெண்கள் )*

***மூன்று பக்க அளவில் விடையளிக்க.***

18. அ. திருமாவளவனின் போர்திறமையையும் வளம் பெருக்கிய தன்மையையும் விவரிக்க

(அல்லது)

ஆ. தலைவி கூற்றாக வரும் குறுந்தொகை பாடல் கருத்துக்களை தொகுத்துரைக்க.

19. அ. நெடுஞ்செழியனும் அறிவுடை நம்பியும் குறிப்பிடும் வாழ்வியல் கருத்துகள் யாவை?

(அல்லது)

ஆ. பூம்புகார் நகர வீதியினை பட்டினப்பாலை எவ்வாறு எடுத்துரைத்துள்ளது என்பதை குறித்து எழுதுக.

20. அ. தலைவன் தன் நெஞ்சுக்கும் தேர்ப்பாகனுக்கும் கூறியது யாது?

(அல்லது)

ஆ. ஆயர் மகளிர் குறவை ஆடுவது பற்றி முல்லைக் கலி கூறுவது யாது?

--------------------------